State Government Victoria Department of Human Services

# உங்கள் தகவல் அந்தரங்கமானவை

## இச்சேவையின் நுகர்வோராக உள்ளபோது உங்களைப் பற்றிய தகவல்களுக்கு என்ன நடக்கும்?

**நாம் யார்?**

உங்கள் நலத்தின் தேவைகட்காக சேர்ந்து உழைக்கும் பல்வேறு சுகாதார சமூக பாதுகாப்பு சேவைகளில் ஒன்றாகும்.

**உங்களைப் பற்றி என்ன தகவல்களை நாம் சேகரிக்கிறோம்?**

நுகர்வோர் பதிவில் உங்கள் பெயர் தொடர்பு விபரங்கள் உள்ளன. நீங்கள் ஒவ்வொரு தடவையும் எங்களை சந்திக்கும் போது உங்கள் நலம் அதைப் பாதுகாக்கும் திட்டங்கள் போன்ற மற்ற விபரங்கள் பதிவாகின்றன.

**உங்களைப் பற்றிய தகவல்களை ஏன் சேகரிக்கிறோம்?**

உங்கள் தேவைகள் பற்றிய விபரங்கள் நடைமுதலாக இருப்பதால் உங்களுக்கு சிறந்த முறையில் சேவையளிக்க முடிகிறது. அதே வேளையில் சேவைகளை மேலும் நன்றாக திட்டமிடவும் நிர்வகிக்கவும் இத் தகவல்களை நாம் உபயோகப்படுத்துகிறோம்.

**வேறு யார் உங்கள் தகவல்களை அறிவார்கள்?**

உங்கள் கவனிப்பில் சம்பந்தப் பட்டுள்ள இச்சேவையில் உள்ள தொழில் வல்லுனர்கள் மட்டுமே இதைப் பார்க்கமுடியும். மற்றப்படி நீங்கள் சம்மதித்தால் அல்லது சட்டப்படி உதாரணமாக மருத்துவ அவசர நிலையில் மட்டுமே விபரங்கள் வெளியிடப்படும்.

**உங்களைப் பற்றிய தகவல்களுக்கு என்ன நடக்கும் என்பதில் உங்கள் பங்கு என்ன?**

உங்கள் தகவல்களுக்கு என்ன நடக்கும் என்பதில் உங்களுக்கும் சொல் உண்டு. உங்களுக்கு சரியான கவனிப்பு வழங்குவதற்கு நாங்கள் நீங்கள் தரும் தகவல்களில் தங்கி இருக்கிறோம். நீங்கள் சில தகவல்ளைத் தர மறுக்கலாம் அல்லது பதிவு விபரங்களுக்கு அனுமதி மறுக்கலாம். ஆனால் அது உங்கள் உரிமை. ஆனால் அது உங்களுக்கு சிறந்த சேவை அளிப்பதைப் பாதிக்கலாம். உங்கள் இணக்கத்தை மாற்றவோ அல்லது ரத்துச் செய்யவோ விரும்பின் எம்முடன் பேசவும்.

**உங்கள் தகவல்கள் எப்படிப் பாதுகாக்கப்படுகின்றன?**

உங்கள் தகவல்களை இரகசியமாகப் பாதுகாப்பது எமது கடமை. சட்டமும் உங்கள் தகவல்களை இரகசியமாகப் பாதுகாக்கும்.

உங்கள் விபரங்களை நாம் மிகக் கடுமையாகப் பாதுகாத்து பத்திரப்படுத்துவோம்.

**உங்கள் தகவல்களை நீங்கள் அணுகமுடியுமா?**

ஆம். நீங்கள் உங்களைப் பற்றிய தகவல்களைப் பார்க்கவும். தேவைப்படின் திருத்தவும் உரிமை உண்டு.

**வேறு ஏதாவது கேள்விகளா?**

நீங்கள் உமது சேவையின் நுகர்வோராய் உள்ளபோது உங்களைப் பற்றிய தகவல் என்ன நடக்கும் என்பது பற்றி வேறு கேள்விகளோ அல்லது புகார்களோ இருந்தால அல்லது உங்களைப் பற்றிய பதிவேட்டினைப் பார்க்க விரும்பினால் எமது அலுவலர்கள் யாருடனாவது தயவு செய்து பேசுங்கள்.